**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.266 of 2022

Deposition of PW.1

Name of the Witness: திருமதி.சுபத்ரா

Date : 17.11.2025

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1) 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பதாக என் அம்மா கிரய பத்திரம் 19.08.2016 ம் தேதியில் ரூ.17,00,000/-த்தை விலை பேசி ரூ.80,000/- முன்பணம் பெற்று கொண்டு கிரய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரய பத்திரம் எழுதி கொள்ள தயாராக இருந்த நிலையிலும் நாங்கள் மூல பத்திரம் கிடைக்கவில்லை என்பதால் காலதாமதம் படுத்தி வந்தோம் என்றால் சரியல்ல. 25.01.2019ம் தேதியில் என் அண்ணன் ரவி வழக்கு சொத்தின் மூல பத்திரம் காணவில்லை என்று தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த விளம்பரத்தை பார்த்து 1ம் பிரதிவாதி எங்களை அணுகி கேட்டார் என்றால் சரியல்ல.

2) 1ம் பிரதிவாதிக்கு கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு நடேசன் என்பவருக்கு 19.08.2016ல் சென்ட் ஒன்றுக்கு ரூ.1,05,000/- விலை பேசி ரூ.5,00,000/- முன்பணம் பெற்று கொண்டு நான்கு மாதம் வாய்தா வைத்து தாவா கிரய ஒப்பந்தம் என் அம்மா விசாலாட்சி, என் அண்ணன் ரவி எழுதி கொடுத்துள்ளார்கள் என்றாலும் அந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றாலும்

சரியல்ல. அது போல கிரய ஒப்பந்தம் போட்டது உண்மை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நடேசனுக்கு நாங்கள் எழுதி கொடுத்த 19.08.2016 தேதியிட்ட கிரய பத்திரம் பற்றி கேட்டபோது நாங்கள் தெரியாது என்று சொன்னோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 19.08.2016 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் 10.05.2018 தேதியிட்ட செல்லில், 16.06.2018 தேதியிட்ட செல்லில், 27.08.2020 தேதியிட்ட செல்லில், 30.12.2021 தேதியிட்ட செல்லில் உள்ளது என் கையெழுத்து என்றால் சரியல்ல. பாப்பிரெட்டிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் ராமசாமி என்பவருக்கு 03.09.2019 தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல.

கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது, தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை